மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்தப் பிரச்சினைகள் எல்லாம் மத்திய சர்க்காரோடு போராடுவதற்காக இருப்பதாகக் கருதுவது தவறு. இந்தப் பிரச்சினைகளை மத்திய சர்க்காரிடத்தில் நிரம்ப வலியுறுத்தி வந்திருக்கிறோம். பர்மா அகதிகள் அங்கு விட்டு வந்த சொத்துக்களைத் திரும்பப் பெற்றுத் தரவேண்டுமென்பதைப் பற்றி இந்த அவையில் கூட எல்லா கட்சி உறுப்பினர்களும் ஒன்றுபட்டு உத்தியோகப் பற்றற்ற தீர்மான மாக நிறைவேற்றி இந்திய அரசுக்கு அனுப்பினால் கூட பலன் இருக்கும்.

Police Flying Squads

*391 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to disband the Police Flying Squads for checking over-speeding by motor vehicles : and

(*b*) if so, the object of the same ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, recently I have heard that Flying Squads have been disbanded and that their work has been given to the regular police. Is that a fact ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, the hon. Member is misinformed.

திரு. நா. காசிராமன் : அதிக வேகமாகச் செல்லும் மோட்டார் வண்டிகளை செக் செய்வதற்காக உள்ள போலீஸ் பிரிவை நிறுத்திவிடப் போவதில்லை என்று சொன்னார்கள். அவர்களுக்குப் புதிய வண்டிகளை வாங்கிக் கொடுத்தால்தான் இதை நன்றாகச் செய்ய முடியும் என்ற காரணத்தால் அதற்காக அதிகப்பணம் ஒதுக்கி வண்டிகளை வாங்க சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கேள்வி இந்தப் பிரிவை எடுத்துவிட்டார்களா என்பது. " எடுக்கவில்லை " என்று பதிலளிக்கப் பட்டது. அவர்களுடைய திறமையை அதிகப்படுத்துவதற்கு வழிவகைகள் தேவைப்பட்டால் ஆலோசிக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Sir, is it a fact that some reorganisation is taking place in the Police Department, with the result that some retrenchment is taking place and that some police officials have been affected by it ?

THE HON. THIRU C. N. ANNADURAI : I want my hon. Friend, Thiru Vinayakam to go to the source which has supplied him with this information and get it corrected.

State Emblem

* 392 *Q*—THIRU K. VINAYAKAM : Will the Hon the Chief Minister be pleased to state—

(*a*) under what authority and under what rules and sanctions the Government have changed the motto ' Satyameva Jayathe " in Sanskrit in the State Emblem into " Vaimaye Vellum " in Tamil ; and

(*b*) was the Legislature consulted ?